ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

भूषणैर्वसनैः पात्रैः पुत्राणामुपलालनैः ।
सकृदागत्य गच्छन्ती कन्या निर्माष्टि मन्दिरम् ॥

புத்திரிகளானவர்கள் பிதாவின் கிரஹத்தில் அற்பகாலமிருந்து பிறகு புருஷன் வீடு செல்லும்பொழுது தமக்கு ஆபரணம், ஆடை, பாத்திரம் இவைகள் வேண்டுமென்றும் தம் புத்திரர்களுக்கு ஆபரணம் முதலியவைகள் வேண்டுமென்றும் பலவிதமாய் பிதாவிடமிருந்து கிரகித்துக்கொண்டு அந்தவீட்டில் ஒன்றுமில்லாமல் செய்துவிடுகிறார்கள்.

அதாவது ஸ்திரீகள் இயற்கையில் பிறர்படும் சிரமத்தை அற்பமேனுமறியாமல் தன் சுகத்தையே பெரிதாய்க்கருதி அதையடைவதற்கு வேண்டிய பிரயத்தனத்தையே செய்கிறார்கள் என்று நிரூபிக்கிறார். ஒருவனுடைய புத்திரியானவள் தன் பர்த்தாவின் கிரகத்தையடைந்து பிறகு ஏதாவதொரு சமயத்தில் தந்தையின் அகத்திற்கேகி மறுபடி புருஷன் வீட்டிற்குப் போகும்போது தன் பிதா எவ்வித சிரமதசையிலிருந்தாலும் அதைச்சற்றும் கவனியாமல் காப்பு ஒடிந்துபோய்விட்டது, சங்கிலி பழையதாயிருக்கிறது என்றும் அவைகளைப் புதிதாய்ச் செய்துகொடுக்கவேண்டுமென்றும், இரண்டு மேன்மையான புடவைகள் வேண்டுமென்றும், தன் குடும்பத்திற்கு சில பாத்திரங்கள் அவசியம் வேண்டியிருக்கின்றனவென்றும், தன் ஸம்பந்தமாய் வேண்டியவைகளைப் பெற்றுக்கொண்டு பிறகு, தன் புத்திரர்களுக்கு சட்டை, ஆபரணம் முதலானவைகள் வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறாள். இம்மட்டோடல்லாமல் பின்னும் வீட்டிலிருக்கும் சாமான்களை யெடுத்துக்கொள்கிறாள். இவ்விதம் பலவிதமாய் ஒருமுறைபிதாவின் வீடுவந்து புருஷன் வீட்டுக்குத் திரும்பிச் செல்லுகையில் அந்தவீட்டில் ஒரு ஸாமானுமில்லாமல் சுத்தம் பண்ணிவிட்டுப் போகிறாள் என்று ஒரு பெரியவாள் சொல்லியிருக்கிறார். ஆகையால் ஸ்திரீகள் தம் தம் பிதாக்களை அவர்கள் சக்திக்கு மீறி அதிகம் தங்களுக்குச்செய்யவேண்டுமென்று நிர்ப்பந்திக்காமல், ஸௌகரியத்தை யனுஸரித்துத் தங்களுக்கு வேண்டியவைகளை அபேக்ஷித்தால் உசிதமாயிருக்குமென்று தெரிவிக்கிறார்.

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-ஸூ ஆடி-மீ சஉ

ஸம்ஸ்கிருத பாஷாபி விருத்தி

இதுநிற்க; ஸமஸ்கிருதக்கல்வியின் விசாலத்திற்கு அளவில்லையாதலால், இச்சிறு வியாஸத்திற்குள் அதிலுள்ள பெயர்பெற்றகிரந்தங்களைக் குறித்து எழுதமுயல்வது அசாத்தியம். இதுவரை, பற்பல வரிய நூல்கள் வெளிக்குக்கொண்டுவரப்பட்டதுமன்றி பிரதிதினமும் ஏதாவது ஒன்று வெளியாய்க்கொண்டேயிருக்கின்றது. வடமொழியாகிற ஸமுத்திரத்தில் நல்முத்துக்கள் ஏராளமெனினும், அகாதமான அச்சாகரத்தில் முழுதும் மூழ்கி அவைகளை எடுக்க முயலாதவர்களுக்கு அவைகள் கிட்டா. ஸம்ஸ்கிருதத்தில் அறுபத்திநான்கு தத்துவங்களும் சாஸ்திரங்களு மிருக்கின்றன வென்றாலும், நாம், விரிவிற்கஞ்சி முக்கியமாயிருக்கும் மூன்றைக்குறித்துமாத்திரம் நமது ஊக்கத்தைச் செலுத்துகின்றோம். அவைகள், சோதிடம், வைத்தியம். யோகம் என்ற இம் மூன்றுசாஸ்திரங்களே. இக்காலத்தில் உலகில் சாஸ்திரங்களைப் பரிசீலனை செய்பவர்கள் இந்நூல்களின் மதிப்பையறிந்து இவைகளைவிருத்திசெய்ய வேண்டுமென்ற எண்ணங்கொண்டிருந்த போதிலும் இவைகள் வெளிக்குவராமல் ஒளித்துப்போகின்றன. இவ்வரியநூல்களைப் படித்தறிய வேண்டுமாயின், ஒருவன் தன் வாணாள் முழுதும் இவைகளில் செலவிட்டாலும் போதாதாதலால், இயற்கையிலேயே இவைகளிலபிலாஷையும், புத்திகூர்மையுமுள்ள சிலர் மாத்திரமே இவைகளை நன்றாய்க்கற்றுணர்வதற்கு சக்தியுள்ளவர்கள். யோகத்தைப் போலொற்ற அவ்வளவு விநோதமான சாஸ்திரத்தை உலகத்திலுள்ள மற்றெந்த ஜாதியாராவது கண்டுபிடிக்கவில்லையென்பது எமது பூர்ண நம்பிக்கை. இப்பேர்

பட்டவிலையுயர்ந்த வஸ்துக்களின் புதயல்கள் ஸம்ஸ்கிருதம் ஒன்றுமாத்திரமே நன்கு நிறைந்திருக்கின்றன. ஒப்புயர்வற்றதும், மிக்க உபயோகமான கல்விகளைச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் களஞ்சியம் போலொற்ற ஓர் வித்யாமண்டலத்தைக் குறித்துச் சிறிது கூறுவதற்கு இது தகுந்த விடமென நினைக்கின்றோம். அதாவது, அதிநிபுணரான சுக்ராச்சார்யராலியற்றப்பட்டதும், மிகப்பிரஸித்தமானதுமான சுக்ரநீதியே. அது சிலபாகங்களாக அகப்படுகின்றதே தவிர புஸ்தகமுழுவதும் அகப்படவில்லை. ஆயினும் அதைப் பெரும்படியாய் வாசித்தாலும் கூட அதிலுள்ள விலையற்ற விஷயங்களும், அதிரகஸ்யங்களுமே, அந்நூலாசிரியர்கள் அக்காலத்திலேயே எவ்வளவு நாகரீக மேம்பாடடைந்திருந்தார்களென நன்கு உணர்த்தும்.

இயற்கையாகவே அளவற்ற மதிப்பானது ஸம்ஸ்கிருத பாஷைக்கு இருப்பினும், அதைப்படிப்பதினாலுண்டாகும் மாறுதலான நன்மைகளைப் பார்க்கிலும் அது குறைந்ததல்ல. ஐரோப்பியர்களுக்கு இச் சம்ஸ்கிருதம் கண்டுபிடிக்கப்பட்டவரையிலும் "சப்தோத்பத்தி சாஸ்திரம்" (Philology) முற்றிலும் குறைவாகவேயிருந்தது. இப்பொழுது ஐரோப்பியமாணுக்கர்களுக்கு இந்த ஸம்ஸ்கிருத பாஷை தெரிந்த பிறகே அந்த சப்தோத்பத்தி சாஸ்திரமானது (Science of Comparative Philology) நாளுக்குநாள் வெகு சீக்கிரமாக விருத்தியடைந்து கொண்டிருப்பதுமன்றி அதன் முடிவுக்கும் வந்துவிட்டதெனக் கூறலாம். ஸம்ஸ்கிருதம் விருத்தியாக, விருத்தியாக மனிதர்கள் பேசும் பாஷை உத்பத்தியாவதும், விருத்தியடைவதும், க்ஷீணத்தை யடைவதும் செவ்வையாய் விளக்கப்படுகின்றன. உலகத்திலுள்ள அனேக பாஷைகளிலுள்ள சொற்களெல்லாம் ஸம்ஸ்கிருத பாஷையின் தாதுவுக்குத் தொடர்ந்து கொண்டு வரப்படலாம் (உதாரணமாக தற்காலம் உலகில் எங்கும் வழங்கும் ஆங்கில பஷை யானது ஸம்ஸ்கிருதத்திலிருந்து பற்பல பதங்களை கிருகித்ததென்று ஊகிப்பதற்குரிய ஆதாரங்கள் பல உள. அதிலுள்ள "Father" என்னும் பதம், पितृ என்னும் வட-

மொழியைப் பின்பற்றிய "Pater" என்னும் (Latin) வார்த்யிலிருந்து உண்டாயிற்றென்றும், அம்மாதிரியே, "Brother," "Must," "No" முதலிய சொற்கள், முறையே भ्रातृ, मुष्क्, न என்ற பதங்களிலிருந்து ஜனித்தனவென்றும் புலப்படுகின்றது. இதனால் உலகத்திலுள்ள எல்லா பாஷைகளுக்கும் ஸம்ஸ்கிருதமானது தாய் ஸ்தானத்திலிருப்பதோடுகூட பாஷாசாஸ்திரத்திற்கும் உற்பத்திஸ்தானமென்று சொல்லலாம். ஸம்ஸ்கிருத பாஷையும் அதிலுள்ள கிரந்தங்களும் புராணிகர்களுக்கும் விசேஷ உபகாரம் செய்கின்றதென்பதில் சிறிதும் ஸந்தேகமில்லை. சரித்திரங்களில்லாத காலங்களிலிருந்த மனிதர்களின் நடையுடை பாவனை முதலான சரித்திரங்களையறிந்துகொள்வதற்கும்' மனிதனுடைய முற்பிறப்பின் விஷயங்களை தெளிவுறத்தெரிந்துகொள்வதற்கும் ஸம்ஸ்கிருதத்தைப் படிப்பவர்களுக்கு அதிலுள்ள கிரந்தங்கள் செவ்வையாக இசைந்திருக்கின்றன. வேதமந்திரங்களும், இராமாயணமும், மஹாபாரதமும் இன்னுமற்றுமுள்ள புராணங்களும் மேற்கூறிய நுட்பவிசாரணைகளுக்குக்குறைவில்லாத உபகரணங்களைக் கொடுக்கின்றன.

இதுவு மன்றி ,முது மொழியான இவ்வட மொழியிலுள்ள மதசம் பந்தமான கிரந்தங்களையும் சாஸ்திரங்களையும் மிக்கஆவலுடன் படிக்கும் உண்மையான உத்தமமாணுக்கனுடைய மனதிலுண்டாக்கும் தெய்வபக்திக்கும் சாந்தத்திற்கும் அளவில்லை இத்தகைய அளவற்ற மேன்மைபொருந்திய நம் ஸம்ஸ்கிருத பாஷையையும் ,அதிலுள்ள மதசம்பந்தமான சுருதிஸ்மிருதிமுதலிய அரிய நூற்களையும் ,ஆங்கில பாஷா ஞானத்தாலுண்டான அகந்தை யென்னும் கொடிய விஷஜ்வரத்தால் பீடிக்கப்பட்ட சிலர் ,அவைகள் முற்றும் பிறட்டென்றும் ஒன்று மறியாத நம் முன்னோர்கள் அவைகளைத்தங்களுக்கனுகூலமாய் எழுதிவைத்துக்கொண்டார்களென்றும் ,மாக்ஸ்முல்லர் (Maxmuller) முதலிய மேனாட்டு நவீனஸம்ஸ்கிருபண்டிதர்போல் நம்மவர்கள் அவ்வளவு ஞானவான்களல்லரென்றும் தங்களுக்குத் தோன்றியவாறு பிதற்றிக்கொண்டு திரிவது என்ன பேதமை! அந்தோ

இதுவும்கலியின்கொடுமையேயன்றோ !மேற்கூறிய அபிப்பிரா யமுள்ள சிறுவர்பலருக்கு, நம் நாட்டிலுள்ள ஸம்ஸ்கிருத பண் டிதர்கள் எவ்வளவு அறிஞர்களாயிருப்பினும் நமது வடமொழி யினுயர்வையும் நமதுமதத்தின் பெருமையையும் எவ்வளவுபிர மாணங்களுடனெடுத்துக்கூறினும், அவைகளில் நம்பிக்கையும் கௌரவமும் உண்டாக மாட்டாதாகையாலும், அவர்களாலே யே நிபுணர்களென்று அங்கீகரிக்கப்பட்டுள்ள மேற்குதேசத்துப் புலவர்கள் சொல்லுகின்றதை அவர்கள்சீக்கிரமங்கீகரிக்கின்றபடி யாலும் ,நமது புராதனமான ஸம்ஸ்கிருத பாஷையைப்பற்றியும் அதிலுள்ள நமதுசாஸ்திரங்களைப்பற்றியும், மேற் சொல்லப்பட் ட மாக்ஸ்முல்லர்(Maxmuller) ஷோப்ன்ஹார்(Schopenhauer) முதலியோர்கள் ,எவ்வாறு அபிப்ராயப்பட்டிருக்கிறார் களென் று சற்று ஊகிப்போம்

கும்பகோணத்தில் விளங்கும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகளவர் கள் மடத்தில் நடைபெறும் அத்வைத ஸபை யில் தீர்மானிக்கப்பட்ட நாளது ஸூத்திய

உபாகர்ம நிர்ணயம்.

———o———

நாளது ருதிரோத்காரி-ஸு வரும் உபாகர்மகாலத்தை நிர்ணயிக்கவேண்டியதற்காக நாளது ஸு ஆடி-மீ 1௳ மாலை யில் ஸ்ரீமடத்தில் கூடியிருந்த அத்வைதஸபையின் தர்மசாஸ் திர பரீக்ஷாதிகாரி பிரும்மஸ்ரீ ம. சுப்பிரமணிய சாஸ்திரிகளவர் கள் ஷை ஸபையின் பரீக்ஷாதிகாரிகளான பிரும்மஸ்ரீ யக்ஞஸ் வாமி சாஸ்திகளவர்கள் பிரும்மஸ்ரீ க. கிருஷ்ணசாஸ்திரியளவர் கள் பிரும்மஸ்ரீ வெங்கடசுப்பா சாஸ்திரிகளவர்கள் பிரும்மஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்கள் முதலானவர்களாலும் ஸ்ரீ ஜகத்

குரு ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் வி. எஸ். வெங்கடராம சாஸ்திரிகள் ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் மஹோபதேசகர் ப. பஞ்சாபகேச சாஸ்திரிகள் இவர்களாலும் மற்றுமுள்ள ஸபாபண்டிதர்களாலும் விசாரம் செய்து தீர்மானிக்கப்பட்ட சித்தாந்தம் பின் வருமாறு,

நாளது ருத்ரோத்காரி ஸம்வத்ஸரத்திய பிரதமதுதீயாதி யாஜுஷோபாகர்மம் எல்லாவற்றையும் தோஷமற்றதான ஆஷாடியிலேயே அதாவது, ஆடி மாதம் 12உயில் வரும் பௌர்ணமியில் ஆபஸ்தம்ப போதாயன ஸூத்திராவல்ம்பிகள் யாவரும் செய்யவேண்டியது.

இதே விஷயத்தைப் பற்றிச் சில வருஷங்களுக்கு முன் இதே ஸபையில் பெருகவாழ்ந்தான் பிரும்மஸ்ரீ ரங்காசார்யரவர்கள் பிரும்மஸ்ரீசேஷாசார்யரவர்கள் முதலிய இதரபண்டிதர்களும் சேர்ந்து இவ்விதமே தீர்மானிக்கப்பட்டு அனுஷ்டானத்திற்கும் வந்திருக்கிறது.

சம்பகாரண்யமென்னும் ராஜமன்னார்குடியில் விளங்கிவந்த மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ தியாகராஜ தீக்ஷிதர் அவர்களாலும் இவ்விஷயத்தில் இதே சித்தாந்தம் தான் சாஸ்திர சம்மதமென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வருஷத்திய ஸாம உபாகர்மவிஷயமாயும் ஷ்டி ஸபையில் ஸடாத்தியக்ஷர்களால் தீர்மானிக்கப்பட்ட சித்தாந்தம்.

ஸாமசாகாதீசனுகிய குஜனுடைய மௌட்டியதோஷமற்றதான புரட்டாசி மாதத்தில் 24உ மஹாளயபக்ஷ அமாவாசை யன்றுவரும் ஹஸ்தநக்ஷத்திரத்தில்ஸாமகர்கள்யாவரும் பிரதமதுதீயாதி சகல உபாகர்மங்களையும் அனுஷ்டிக்கவேண்டியது.

இவ்விஷயங்களில் சாஸ்திரீயமாய் வேறு சங்கையுள்ளவர்கள் ஆர்யதர்மம் பத்திரிகைக்கு பிரமாண புரஸ்ஸரமாய் எழுதியனுப்பி அதின் வாயிலாக சித்தாந்தத்தை தெரிந்துகொள்ளலாம்.

வால்மீகி ராமாயணத்தின்

ஸூக்ஷ்ம தர்மங்கள்.

இப்பாத வர்ஷத்தில் நம்மக்களனைவராலும் ஜாதிமதபேத மின்றி ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் புகழப்படுவதற்குக்காரண மென்னவென்றால் இந்நூலானது ஹிந்து தர்மநீதிகளை வெகு இனிமையாய்ப் புகட்டுகிறது என்பதே. இதர நீதிநூல்களுக் கும் இதற்கும் வேறுபாடு யாதெனில், முன் சொன்னவை தர்ம நீதிகளை எடுத்துரைத்து அத்துடன் நின்றுவிடுகின்றன. ராமா யணமோவென்றால் அதே தர்மநீதிகளை உதாரணங்களின் வாயிலாகவுமுபதேசிக்கின்றது. அதாவது தர்மத்தையுபதே சிக்கும் 'ச்ருதி ஸ்மிருதி' முதலிய கிரந்தங்கள் "புத்ரர்கள் பிதா வுக்குட்பட்டு நடக்கவேண்டும்" "ஸகோதரர்கள் அன்புடன் வாழவேண்டும்" என்று இம்மாதிரி வாக்கியங்களை மாத்திரம் கூறுகின்றன. ஆனால் ராமாயணம், தசரதசக்ரவர்த்தியின் ஸத் புத்ரனான ஸ்ரீ ராமச்சந்திரன் "பிதுருவாக்கியபரிபாலனம்" என்னும் தர்மத்தையும் இன்னும் இதுபோன்ற இதர தர்மங்க ளையும் கைக்கொண்டு ராமாயண கதையில் சொல்லப்பட்ட பற் பல ஸந்தர்ப்பங்களிலும் இவைகளைக் கைவிடாது அனுஷ்டித்து வந்தாரென்ற கதையை எடுத்துக்காட்டியதன்மூலமாய் ஸத்புத் ரர்கள் அன்புள்ள ஸகோதரர்கள் இவர்களுடைய கடமைகளைச் செவ்வனே எடுத்துச்சொல்லுகிறது. மேலும், இந்த தர்மங்களை ப்படிப்போர்மனதில் நன்கு பதியுமாறு வால்மீகி மகரிஷி கதா புருஷர்கள் ஒவ்வொருவரையும் மிகுந்த உன்னத தசையிலும், மிகுந்த கஷ்டதசையிலும் மாற்றி மாற்றி வைத்து அவர்கள் அந்தந்த ஸந்தர்ப்பங்களிலும் தர்மநெறி தவறாது எப்படி நடந் துகொண்டார்கள் என்பதையும் விஸ்தாரமாய் எடுத்துக்காட்டி யிருக்கிறார். இக்காரணம்பற்றியே ஜன்மமெடுத்த ஒவ்வொரு ஸ்திரீ புருஷனும் இந்நூலைப்படித்து அதன் உட்கருத்தையறி

ந்துகொண்டு அதில் சொல்லியபடி அனுஷ்டிக்கவேண்டியது முற்றிலும் அவச்யமென்று ஆஸ்திகசிகாமணிகள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வுத்தம தர்மங்களையுபதேசிப்பதில் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியே முதன்மையானவர் தகப்பன் புத்ரரிடத்திலும், புத்ரர் பெற்றோரிடத்திலும், பர்த்தா பார்யையிடத்திலும், தமயன் தம்பியிடத்திலும், அரசன் குடிகள், சத்ரு, மித்ரரிவர்களிடத்திலும் நடந்துகொள்ளவேண்டிய விதத்தை உலகத்தாருக்கு உபதேசிப்பதற்கே ஸ்ரீராமன் நம்மைப்போல் ஒரு மனிதராய் அவதரித்து கஷ்ட சுகங்களையனுபவித்து நாம் நடந்துகொள்ள வேண்டிய விதத்தைத்தானே நடந்து காட்டியிருக்கிறார். "பிதாவின் நோக்கத்துடன் வெகு ஆசையுடன் தந்தை தந்த ராஜ்யத்தையும் வேண்டாமென்று விடுத்து 14-வருஷகாலம் வனவாஸம் செய்து உலகத்தில் புத்ரர்கள் பிதாவின் வார்த்தைக்குட்படவேண்டுமென்ற தர்மத்தை விளக்கியிருக்கிறார். தன் அன்புள்ள லக்ஷ்மணன் யுத்தகளத்தில் பிரக்ஞையற்று கிடக்கையில் அவன் பரகதி அடைந்ததாக நினைத்து" ஹே லக்ஷ்மணா! நான் ராவணனை யுத்தத்தில் ஜயித்து ஜயலக்ஷ்மியையடைந்து பயனென்ன? இவ்வளவு கஷ்டங்களையனுபவித்து என் ஸீதாதேவியை மறுபடியும் பெற்றுப் பிரயோஜனம் என்ன? வனவாஸம் செய்த பிறகு அயோத்யையும் எனக்குக் கிடைத்தென்ன? நீ இல்லாமல் இவையெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லையே யென்று கதறி உலகில் சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வைக்கவேண்டிய வாத்ஸல்யத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். ஜனக மஹாராஜனது அருமைப்புதல்வியும் ஸ்ரீராமமூர்த்தியின் மனையாளுமான ஸீதா தேவியார் அயோத்யையின் வாஸத்தையும் அரண்மனை ஸுகத்தையும் விட்டு, வனவாஸ கஷ்டத்தையும் அதனால் ஏற்படக்கூடிய அஸௌக்கியத்தையும் கவனியாது, தண்டகாரண்யத்துக்குச் செல்லத் துணிந்த காரணம என்ன? ஸ்ரீராமன் தன் தேவியிடத்தில் வைத்திருந்த அன்பையும் பரமையையும் தவிர வேறு

ன்றுமில்லை. ராஜ சுகத்தைவிட்டு வனவாஸ கஷ்டத்தையனுப விக்க ஒரு பெண்மணிக்கு தைர்யம் வரவேண்டுமானால் பர்த்தா அந்த பார்யையிடத்தில் எப்படி நடந்துகொண்டிருக்கவேண்டும்! இதன்மூலமாய் பர்த்தாக்கள் தங்கள் பத்னிகளிடத்தில் ப்ரேமையுடன் நடந்துகொள்ளவேண்டுமென்பதை யுபதேசித்திருக்கிறார். ஸ்நேஹ தர்மத்தை அனுஷ்டித்துக்காட்டியதில் ஸ்ரீ ராமனுக்கு ஈடொருவருமில்லை. ஸுக்ரீவனுக்காக ஸ்ரீராம்பிரான் பட்ட பாடும், குஹனிடம் அவர் வைத்திருந்த நட்பும் யாவருமறிந்த விஷயம். தன் உயர்நிலையான லக்ஷ்மணன் யுத்தகளத்தில் அடிபட்டு கிடக்கையில் தன் உயிரையும் மாய்த்துக் கொள்ள விரும்பிய ஸ்ரீராமர் அச்சமயத்திலும் தான் விபீஷணனுக்கு செய்த பிரதிக்ஞையை மறக்கவில்லை. உன்னை லங்கைக்கு அரசனாய் முடிசூட்டுகிறேனென்று உனக்கு வாக்களிக்காமலிருந்தால் இப்போதே என் சகோதரனைப் பின்தொடர்ந்து விண்ணுலகம் சென்றிருப்பேன்" என்று விபீஷணனை நோக்கி ஸ்ரீராமன் சொல்லுகிறார். எக்காலத்திலும் ஸ்நேகத்திற்குச் செய்த பிரதிக்ஞைக்கும் கட்டுப்பட்டே தீரவேண்டுமென்பதற்கு இதைக்காட்டிலும் மேலான அத்தாட்சி தேவையா? உலகில் எந்த குணமும் ஸம்பாதித்துக்கொள்வது ஸுலபம். ஆனால் "சத்ருவை விச்வாசத்தினால் ஜயிப்பது" எவராலுமியலாது. இதையனுஷ்டிப்போர்கள் மகாத்மாக்கள் என்பதில் ஸந்தேகமில்லை. தன் பார்யையை அபகரித்த ராவணனைக்காட்டிலும் ஸ்ரீ ராமனுக்கு வேறொருவர் மேலான தீங்கிழைத்திருக்கமுடியாது. இதற்கு ஸ்ரீராமன் தன் சத்ருவுக்கு உபகாரம் செய்தாரேயொழிய அபகாரம் செய்யவில்லை. யுத்தகளத்தில் "ராவணன் ஸீதா தேவியைத் திரும்பக் கொடுத்து அவன் செய்த அபராதத்தை ஒத்துக்கொண்டால் அவனை மன்னித்து விடத்தயாராகவிருந்தார். இதினின்றும் பகைவர்களிடத்தில் உயர்குலத்தோர் நடந்துகொள்ளவேண்டிய மார்க்கம் நன்கு புலப்படுகிறது.

மத ஸம்பந்தமான அனேக ஆராய்ச்சிகள் செய்து கீர்த்தி பெற்றிருக்கும் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பீ. ஏ. அவர்

கள் எழுதியிருக்கிற "தர்ம ரத்னாவளி"யின் முதல் பாகமான "ஸ்ரீராமச்சந்திரன்" என்னும் புத்தகத்தில் மேல் சொல்லிய ஒவ்வொரு தர்மமும் பகுத்தெடுத்து செம்மையாய் விளக்கப் பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமபிரானின் சரிதையிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய தர்மநீதிகள் வெகு உருக்கமான கதைகளுடன் சேர்த்து வரையப்பட்டிருக்கின்றன. கற்றோர் கல்லாதார் அனைவரும் இதன் உட்கருத்தை உணருமாறு வெகு தெளிவான தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கிறது. விஷயாசனையும் அபூர்வமாயிருக்கிறது நம்மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் மதப்படிப்பில்லாத இந்நாளில் இப்புத்தகம் வெகு உபகாரம் தரும். அவரவர்களின் பெற்றோர்கள் தங்கள் சிறுவர் சிறுமிகளுக்கு இந்நூலை வாங்கிக் கொடுத்து அதைப்படிக்கும்படி செய்வார்களானால் குழந்தைகளின் மதப்பயிர்சசி ஸம்பந்தமாக அவர்களின் கடமையை செய்ததாக கருதப்படுவதுடன் இந்நெருக்கடியான நிலைமையில் கிருஸ்துவ பாதரிகள் செய்துவரும் முயற்சியை ஒருவாறு தடைப்படுத்தி ஹிந்துமதாபிவிருத்திக்குப் பாடுபட்டவர்களாக ஆவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

இப்புத்தகம் வேண்டுவோர் மைலாப்பூர் சந்திரவிலாஸ புஸ்தகசாலைக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ மடம் கல்வி அபிவிருத்தி.

இப்பொழுதே கவனிக்கவேண்டியது? திருவானைக்காவல் கோவில் ஸம்மேளன ஸமயத்தில் ஸ்ரீ மடத்தின் ஆதரவில் அங்கேயே விச்வவித்யாபீடம் ஸ்தாபிப்பதாக ப்ரஸ்தாபம் ஏற்

பட்டது. ஷை விஷயத்தைப்பற்றிய தீர்மானத்தை ப்ரேரே பிக்கும்பொழுதே பெங்களூர் ஸ்ரீமான். ஸ்ரீநிவாஸ சிங்கப்ப. சேட்லூர் அவர்கள் பிரதிகிராமத்திலும், நகரத்திலும் பிரும்ம சர்யாலங்கள் ஸ்தாபிக்கவேண்டியது அதி அவச்யம் என்று வற்புறுத்திப் பேசிய வார்த்தைகள் ஆங்கிருந்த அனைவரும் அன்புடன் கேட்டிருந்தனர். இதற்குப்பின் ஸ்ரீமத் சங்கராச் சார்யஸ்வாமிகள் இதுவிஷயம் எவ்விதப்ரயத்தனம் செய்திருக் கிறார்கள் என்று அறிய ப்ரயத்தனப்பட்டாரில்லை எவரும்.

தற்காலக் கல்வி நிலை.

தற்சமயம் விசித்ரமான காலம். இங்கிலீஷ் அரசாங்கத் திற்கு முந்திவரையில் பிறும்மணாள், க்ஷத்ரியாள், வைசியாள் மூவரும் முக்யமாய் வேதாத்யயனம், வேதாந்தவிசாரம், கலைப் பழக்கம், தொழில் பழக்கம் அவ்வவ்வர்ணத்துக்கேற்ப சூத்ரர் களும் இதர ஜாதியோர்களும் உலகத்துக்கு வேண்டியபடி கல்வி பயின்று வந்தனர். இப்பொழுது எல்லாஜாதியார்களும் வித்யாஸமன்னியில் இங்கிலீஷ் பள்ளிகளில் கூடிப்படித்து வரு கின்றனர். பால்யம் முதல் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக் கும் உற்றோர்களுக்கும் ஸம்பந்திகளுக்கும் ஒரே மாதிரியாக இந்தக் கல்வியைக்கற்று பரிக்ஷை தேறி ஸர்க்காருக்கு அடிமை யாக வாழ்நாள் முழுவதும் வேலை செய்து பணம் ஸம்பாதித்து இகலோகத்தில் அதிகஸௌகர்யமாக அன்னவஸ்த்ரஆபரணங்களைப் பெற்று பெண் போகத்துடனும் பெருவாழ்வு வாழவேண்டும் என்ற ஒரே எண்ணம் மனத்தில் ஊறிக்கொண்டே இருக்கிறது.

இக்கல்வி கொடுத்தது என்ன ?

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களையும் உலகப் பொருள்களையே ஆராய்ந்து அறிவதில் தயாரித்தது இக்கல்வி. மனத்தை இந்திரியங்களின் வழியே செலுத்தி விஷ யங்களை கிரஹித்து மூளையில் இருத்தும்படியாகச் செய்தது. மூளையை அதிகம் விருத்திசெய்து உலக ஞானம் நன்கு அறி யும்படியாகச்செய்தது. உடல், உடை, அன்னம், ஆபரணம் இவைகளைப் பாதுகாத்து அநுபவிப்பதிலேயே மனத்தையும்

இந்திரியங்களையும் இந்தக்கல்வி ஏவியது. இவ்வளவு சுகங்களையும் கூட அதிகம் கவனிக்காமல் இவைகளுக்குக் காரணமான பண (திரவிய) த்தை ஸம்பாதிப்பதிலேயே கருத்தை நாட்டி வைத்தது. பெயரின் கௌரவத்தில் பெருநாட்டம் உண்டு பண்ணியது.

இந்தக் கல்வி கொடுத்தது என்ன ?

பிறருக்கு உழைக்கவேண்டும் என்ற ஒரே அடிமை எண்ணத்தை மனதில் இருத்தியது. ஸேவகம் செய்து பொருள் தேடுவது என்ற சூத்ர வர்ணத்து தர்மத்தை சரீரத்துடன் வளர்த்து விட்டது. தர்ம அதர்மத்தை அறியும் ஞானத்தை கெடுத்து விட்டது. தன் ஆத்மாவின் ஞாபகமே இல்லாமல் செய்து விட்டது. துர் ஆசையை வளர்த்து விட்டது. பெரியோரிடம் உள்ள மரியாதையைக் கெடுத்துவிட்டது. வணக்கம் ஒடுக்கத்தைவேருடன் களைந்தெறிந்து விட்டது. மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்ற மூவ்வாசையே பிறப்பின் (ஜன்மத்தின்) முக்கிய நோக்கம் என்று நம்பும்படி மனிதர்களைத்தயாரித்து விட்டது. சுருக்கிச்சொல்லின் ஒருவாழ் நாளின் முக்கிய காலமாகிய இளம்பருவத்தை பிரும்மசாரியாகதயாரிக்கப்படவேண்டிய காலத்தை முழுவதும் கெடுத்துவிட்டது.

பிரும்மசரியம் கெட்டதின் பலன் என்ன ?

பிரும்மசர்யத்தின் மஹிமையை நன்கு அறிந்தவர் இரவு பகலாக கண்ணீரை உதிர்த்து உதிர்த்து வருந்தாமல் இருக்க மாட்டார்கள். ஆணி (முக்கிய) வேர் அறுந்தமரம் வாட்டமுறுவது போல் ஒவ்வொரு குடும்பமும் தலைகீழாகமாறித தவிக்கச் சிதரியிருப்பதைக் கவனிக்கும் யோஜனையுள்ள சிலரே இதின் பலனை நன்கறிவார். இந்த பிரும்மசரியத்தின் மேன்மையைப் பலபுஸ்தகங்களாக எழுதினாலும் முடிவாகவிருப்பது அஸாத்யம். மிகச் சிலக்கெடுதியில் முக்கியத்தைப் பற்றி மட்டும் ஈண்டு உரைப்போம். (தொடரும்)

ஸாரம் இரங்காச்சார்யன்

கும்பகோண வாஸிகளான

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி அவர்களாகிய

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள்

ஸ்ரீ மடம் ஸ்ரீ கார்யம்

ஸ்ரீ மடம் சிஷ்யகோடி மஹா ஜனங்களுக்கு க்ஞாபிக்கும்

ஸ்ரீ வியாஸபூஜா மஹோத்ஸவப் பத்திரிகை.

ஸ்ரீ கைலாஸ வாஸியான பரமேசுவரன் பிரம்மாதி தேவர்களின் பிரார்த்தனானுஸாரமாய் ஸ்ரீசங்கரர் என்னும் நாமதேயத்துடன் பூலோகத்தில் அவதாரம் செய்து கலியின் பிரபாவத்தால் அக்காலத்தில் பரவியிருந்த எழுபத்திரண்டு துர்மதங்களைக் கண்டித்து நான்கு வர்ணங்களைச் சார்ந்த ஸமஸ்த ஆஸ்திக சிஷ்யகோடிகளும் உஜ்ஜீவிக்கும்படி வைதிகமான சைவ, வைஷ்ணவ முதலிய ஷண்மதங்களையும் அத்வைத மதத்தையும் நிலைநிறுத்தி ஆஸேது ஹிமாசலமுள்ள முக்கிய க்ஷேத்திரங்களின்கண் யந்திராதி ஸ்தாபனங்களைச் செய்து கைலாசத்தினின்று பஞ்சலிங்கங்களைக்கொண்டுவந்து அநேகமடங்களைஸ்தாபித்து பிறகு முக்திக்ஷேத்திரமான ஸ்ரீ காஞ்சி க்ஷேத்திரத்தில் காமகோடி பீடஸ்தாபனஞ் செய்து அவ்விடத்திலேயே ஸர்வக்ஞ பீடாரோஹணம் செய்து தாமேசிலகாலம் அந்தப்பீடத்தில் வீற்றிருந்தது ஸர்வ ஜனங்களுக்கும் தெரிந்த விஷயம்.

அப்பேர்ப்பட்ட ஆதி சங்கரபகவத்பாதாசாரியாள் அவர்களால் ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்பாளுக்கு ஸ்தாபனம் செய்விக்கப்பட்ட ஸ்ரீ சக்கிரயந்திர தாடங்கங்களை சிஷ்யகோடிகளுடையக்ஷேமார்த்தமாக ஸ்ரீபகவத்பாதாசார்யாளுடைய ஸாக்ஷாத் பரம்பரையான ஸ்ரீ காஞ்சி காமகோடிபீடத்தில் 68-வது ஆசார்யாளாக அபிஷிக்தாளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் நாளது ருதிரோத்காரிஞு சித்திரைமீ ௴ பானுவாரதினம் புனருத்தா

ரணம் செய்து ஷை பிரதிஷ்டா மஹோத்ஸவத்தை நடத்தி இப் போது ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரத்தினின்று விஜயயாத்திரை யாகப்புறப்பட்டு அநேக தீர்த்தாடன க்ஷேத்திராடனங்களைச் செய்துகொண்டு வருகிறார்கள்.

நாளது ருதிரோத்காரிஸு ஆடிமீ 12உ ஆஷாடசுத்தபூர் ணிமை [27-7-23] சுக்கிரவாஸரத்தன்று நடத்தவேண்டிய வியாஸபூஜா மஹோத்ஸவ சாதுர்மாஸ்ய ஸங்கல்பங்களையும் அதுமுதல் நடக்கும் வித்வத்ஸதஸ் முதலானவைகளையும் ஸ்ரீ ஜம்புகேசுவர க்ஷேத்திரமென்னும் திருவானைக்காவலில் சிஷ்ய கோடிகளுடைய பிரார்த்தனானுசாரமாய் நடத்துவதாக நிச்ச யித்திருக்கிறபடியால் ஸ்ரீ மடத்திற்கு முக்யசிஷ்யர்களாகவும் இருக்கிற அசேஷ வித்வன் மஹா ஜனங்கள் முதலான ஸகல ரும் வந்து ஷை சாதுர்மாஸ்ய ப்ரயுக்தமாய் நடத்தவேண்டிய ஸ்ரீ ஸ்வாமிபூஜா பிராம்மண ஸந்தர்ப்பணாதிகளையும் வித்வத் ஸதஸ் முதலான மஹோத்ஸவத்தையும் விமரிசையாய் நடத்தி வைத்து வியாஸாக்ஷதப் பிரஸாதம் பெற்று ஐஹிகாமுஷ்மிக பலன்களை அடையவேண்டுமாய்க் கோருகிறேன்.

முகாம் கரூர்.
ருதிரோத்காரிஸு
ஆனிமீ 30உ

ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரி,
ஸ்ரீ கார்யம் கி. குப்புஸாமி அய்யர்.

யஜுர்வேதிகளின் சிராவணம்.

ஆரியர்களே! இவ்வருடத்தில் யஜுர்வேதிகளின் சிரா வண விஷயமாய்ப் பலபஞ்சாங்கங்களிற் பலவிதமாய்ப் போ டப்பட்டிருக்கிறதைப் பார்க்கும்போது ஆஸ்திகர்களுக்கு இவ் விஷயத்தில் சம்சயமேற்படுமென்பதில்லை. இச் சங்கையின் ஸ் வரூபம் இது. பிரம்மஸ்ரீ T. S. விசுவநாத சிரௌதிகளால் கணிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கத்தில் ஆடிமீ 12உ

யாஜுஷோபாகர்மம் என்று போடப்பட்டிருக்கிறது. 28வது நம்பர் பஞ்சாங்கத்தில் ஆடியில் பிரதமோபாகர்மம் என்றும் ஆவணி 10உ.ல்மற்றஉபாகர்மமென்றும் போடப்பட்டிருக்கிறது மற்றபஞ்சாங்கங்களும் இவ்விரண்டினுள் ஏதாவதொன்றையே சாரும். ஆகவே ஆடிமாதம் என்றும் ஆவணிமாதமென்றும் இருவகைப் படுவதால் ஏதாவதொன்று தான் இவ்விஷயத்தில் சாஸ்திரீயமென்றாகு மென்பதையும் மற்றொருவர் இவ்விஷயத்தில் சாஸ்திரோக்தத்தை தழுவுவது தான் உத்தமமானது பற்றி இவ்விதம் இருவகையாய்ப் போட நேரிட்டதையும் சாஸ்திரத்தையுமாராயப்புகுவோம். இவ்வஷருத்தில் ஆடிமீ 28 தேதி சுக்கிரன் கிழக்கில் அஸ்தமனத்தை அடைகிறான். மறுபடி புரட்டாசி மாதம 29உ மேற்கில் உதயமாகிறான். இது ஒரு புறமிருக்கட்டும். சாஸ்திரப்படி சிராவணகால மின்னதென்பதை ஆராய்வாம்

மனு श्रावण्यां प्रौष्ठपद्यां वाऽप्युपाकृत्य यथाविधि ।
उक्तश्छंदांस्यधीयीत मासान् विप्रोऽर्धपञ्चमान् ॥

சிராவணமாதத்திலாவது ப்ரோஷ்டபத மாதத்திலாவது சாஸ்திரப்படி உபாகர்மா (அத்தியயனாரம்பத்தை) வைச் செய்து நாலரைமாதங்கள் அத்தியயனம் செய்யவேண்டும் என்றார்.

श्रावण्यां पौर्णमास्या मध्याय मुपाकृत्य मासं प्रदोषे नाधीयीत । तैष्यां पौर्णमास्यां रोहिण्यां वा विरमेद् । अर्धपञ्चमाश्चतुरो मासानित्येके ।

சிராவணமாதத்திய பௌர்ணிமையில் அத்தியயனத்தின் ஆரம்பத்தைச் செய்து ஒருமாதம் முன்னிரவில் அத்தியயனம் செய்யக்கூடாது. திஷ்யமாஸ பூர்ணிமையிலாவது ரோஹிணீ நக்ஷத்திரத்திலாவது முடிக்கவேண்டும். நாலரைமாதம் அத்தியயனம் செய்யவேண்டுமென்று 'சிலர் அபிப்பிராயப் படுகின்றனர் என்று ஆபஸ்தம்பர்சொல்கின்றார். இவரது அபிப்பிரா

யப்படி ஐந்து மாதங்களும் சிலர் என்றதின் அபிப்பிராயப்படி நாலரை மாத மென்று மேற்படுகிறது. அப்படியானால் ப்ரோஷ்டபதமாதத்தில் உபாகர்மம் ஏற்படும்.

போதாயனர், श्रावण्यां पौर्णमास्यां आषाढ्यां वोपाकृत्य तैष्यां माघ्यां वोत्सृजेयुः ॥

சிராவண பூர்ணிமாவிலாவது ஆஷாட பூர்ணிமாவிலாவது உபாகர்மம் செய்து புஷ்ய மாதத்திலாவது மாகமாதத்திலாவது விட வேண்டுமென்றார். யஜுர் வேதிகளென்றால் எல்லோரும் ஒரே அனுஷ்டானமுள்ளவர்களல்ல. அதில் போதாயன ஸத்யாஷாட பாரத்வாஜ ஆபஸ்தம்ப அக்னி வேசிய வைகானஸரென்று ஆறுமகரிஷிகளது சூத்திரத்தை அனுஷ்டிப்பவர்களாதலால் வெவ்வேறு பிரிவு ஏற்படும். ஒவ்வொருவரும் தன்தன் ஸூத்திரத்திற்கூறியபடி உபாகர்மம் செய்து கொள்ள வேண்டுமென்பது தான் சஸ்திரத்தின் முக்கிய தாத்பரியம் அதன்பிரகாரம் கீழே சொன்ன ரிஷிகளைத் தவிரமற்றவர்களின் அபிப்பிராயத்தை கவனிப்பாம் ஸத்யாஷாடர்" இனி உபாகர்மத்தையும் உத்ஸர்ஜனத்தையும் விரிப்பாம் சிராவண மாதத்தில் ஒஷதிகள் உண்டான பிறகு ஹஸ்த நக்ஷத்திரத்திலாவது பூர்ணிமையிலாவது அத்தியயனத்தை ஆரம்பிக்க வேண்டும் இதன் வியாக்கியான கர்த்தாமாதிருதத்தர்என்பவர் ஒஷதிகள் உண்டானபிறகு என்று முக்கியமாய்ச் சொன்னதினால் சிராவண மாதத்தில் ஒஷதிகள் உண்டாகாவிடில் ப்ரோஷ்டபதத்திலும் முன்னே உண்டானால் ஆஷாடத்திலும் என்று அர்த்தம் என்றார் -பாரத்வாஜர் ஸத்யாஷாடரைப்போற்கூறிவிட்டார், அக்கினிவேசியர் ஆபஸ்தம்பரைப்போல்தான் -வைகானஸர் ஒன்று ஆஷாடத்திலும் இரண்டாவது சிராவணத்திலும் என்றார் ஆனால் இம்மகரிஷிகள் சிராவணத்தைப்பற்றித் தன் தன் கிருஹ்ய ஸூத்திரத்திற்கூறுயது போல் ஆபஸ்தம்பரும் கிருஹ்யஸூத்திரத்தில் உபாகர்மாவைப் பற்றிக்கூறமறந்தனர். இவர் இதொன்றை மட்டிலும் விடவில்லை சிசுவிற்கு உபநிஷ்கிரமணகர்மாவையும் யக்ஞோபவீதம்

தரிப்பதையும் உபாகர்மாவில் பிர்மசாரிகளுக்கு க்ஷெளரத்தை யும் ஸந்தியாவந்தனம் காயத்ரீஜபம் முதலியவற்றையும் விட்டி ருக்கிறார் ஆனால் இவர்விட்டது மறதியினாலென்றும் சொல்லக்கூ டாது. தன் கிருஹ்யத்தில் சொல்லப்படாது வேறுகிருஹ்யத்தி லிருந்து கிரகிக்கத்தக்கது என்ற நியாயப்படி விட்டாரென் பதுதான் உண்மை. அதிலும்போதாயனர் சொன்னதைத்தான் கிர்கிக்கவேண்டுமென்பது ஸமஸ்த ரிஷிகளின் அபிப்பிராயம் இதிருக்கட்டும் ஆபஸ்தம் பாதுஸூத்திர மென்பதுமுன்னங்கூ றப்பட்ட திருக்கக்கூறவில்லை யென்றெவ்விதம் பொருந்துமெ னலாமா முன்சொன்ன ஸூத்திரம் ஆபஸ்ம்பர் கிருஹயத்தில் கூறவில்லை தர்ம ஸூத்திரத்திற்கூறியுள்ளார் தர்மஸூத்திரம் நான்கு வர்ணத்தவர்களின் பொதுவான தர்மத்தைக்கூறுமான தால் ஆபஸ்தம்பர் கூறவில்லையென்பது பொருந்தும் ஆனால்

पौर्णमास्याश्च नित्यत्वादापस्तम्भस्य शासनात् ।

என்றவிடத்தில் ஆபஸ்தம்பரது சாஸனத்தினாலென்றிருப்பதால் ஆபஸ்தம்பர் தனியாய்ச்சொல்லி யிருக்க வேண்டு மென்று அநுமானம் செய்வோமேயென்றால் இந்த சுலோகம் வியாஸ வசன மென்று வைத்யநாத தீக்ஷிதீயத்தில் இருக்கிறதே தவி ற இது நிர்மூலமென்றே பெரியோர்கள் கூறுவதால் இதைக் கொண்டு செய்யும் அநுமானம் நிலைபெறாதென்று விடுவாம் இதைப்பிரமாண வாக்கியமாய் ஏற்றுக்கொண்டாலும் இதன் அர்த்தத்தை பின்னர் கூறுவோம் ஆகவே அநேகமாய் எல்லா கிருஹ்யக்காரர்களும் சிராவணம் பாத்ரபதம் ஆஷாடம் இம்மூ ன்று மாதங்களும் உபாகர்மத்தின் காலமென வேற்றுக்கொண் டிருக்கின்றனர் என்றாயிற்று. ஆனால் முக்கியகாலம் சிராவணம். மற்றவைகௌணம். முக்கியகாலத்திற்கு தோஷம் ஏற்பட்டால் கௌணத்திற்செய்யவேண்டும் கௌணம் இரண்டிலும் தோஷ மிருக்குமேயானால் சிராவணத்தில்தான் செய்யவேண்டும் இந்த அபிப்பிராயத்தையே வியாஸரும்,

पौर्णमास्याश्च नित्यत्वादापस्तम्बस्य शासनात् ।
मुक्त्वा भाद्रपदाषाढौ श्रावण्यामेव कारयेत् ॥

பூர்ணிமை நித்தியமானதாலும் ஆபஸ்தம்பர் அனுமதி இருப்பதாலும் பாத்ரபதம ஆஷாடம் இவ்விரண்டையும்விட்டு சிராவணத்திலேயே செய்யவேண்டுமென்றார்- இந்த சுலோகத்தின் படிமூன்று மாதங்களிலும் தோஷமேற்படுமேயானல் சிருவணத்தில் செய்யவேண்டு மென்றார். ஏனெனில் வைத்தியநாததீக்ஷிதர் இந்த சுலோகத்தை அடியில்வரும் சுலோகங்களில் இறுதியில் படித்திருக்கிறார் வஸிஷ்டர்,

मलमासे निपतिते सूतके मृतकेऽपि वा ।
ग्रहणे संक्रमे वाऽपि मौढ्येऽपि गुरुशुक्रयोः ॥
प्रोष्ठपद्यामथाषाढ्यामुपाकरणमिष्यते ।
प्रोष्ठपद्यामुपाकुर्याच्छ्रावणे दूषिते यदि ॥
आषाढे वाऽपि कर्तव्यं प्रोष्ठपद्यां च दूषिते ।
मासत्रयेऽपि दोषश्चेच्छ्रावण्यामेव कारयेत् ॥

மலமாதத்திலும் ஜனனசௌசத்திலும் மரணசௌசத்திலும் கிரகணத்திலும், ஸங்கரமணத்திலும் குருசுக்கிர மௌட்டியத்திலும்ப் ரோஷ்டபதியிலாவது ஆஷாடத்திலாவது உபாகர்மம் செய்ய வேண்டும் சிராவணத்திற்கு தோஷமேற்பட்டால் ப்ரோஷ்டபதத்திற்செய்ய வேண்டும், ப்ரோஷ்டபதியிலும் தோஷமேற்பட்டால் ஆஷாடத்திற் செய்ய வேண்டும், மூன்றிலும் தோஷமாயின் சிராவணத்திலேயே செய்யவேண்டும், என்று இதற்கடுத்தாற்போல் இதே அர்த்தமுள்ளவ்யாஸரது வசனமிருக்கிறது அதற்கடுத்து

पौर्णमास्याश्च नित्यत्वात् ।

என்ற வசனமிருக்கிறது இவ்வசனமும் வ்யாஸவசனமென்று தான் அங்குள்ள கிரமத்தால் கூறநேறிடுகிறது. அப்படியே நிச்சயம் செய்வோமானல் இதற்கு முன் வசனமே விரிவாய் இருக்கும்போதுவ்யாஸர் அதைக்காட்டிலும் குறுகிய அர்த்த முள்ள இவ்வசனம் ஆரம்பித்திருக்க மாட்டா

स्थितस्य गतिश्चिन्तनीया ।

என்ற நியாயத்தை ஒட்டிப்பார்த்தால் மூன்று மாதங்களிலும் தோஷம் நேர்ந்தால் சிராவணியில் செய்ய வேண்டுமென்று தான் இவ்வசனமும்வற்புறுத்துகிறது என்றுசொல்லவேண்டும் இவ்வசனம் பிரமாணமற்றது என்பதை வேறு விதத்தாலும் சாதிக்கலாம்- பாருங்கள் பௌர்ணிமாநித்தியமானதால் என்கிறார். பௌர்ணிமா நித்யமென்றாலர்த்த மென்னநித்தியம் வரும் என்பதா. அல்லது பிரதி மாதமும் வரும்என்பதா அல்லது பௌர்ணமியிற் செய்ய வேண்டிய் சிராவணம் நித்தியமென்றர்த்தமா சிராவணம் நித்தியமென்றால் ஸந்தியாவந்தனம் போல் ஆசௌசகாலத்திலும் ஸங்கராந்தி முதலிய விளக்கப்பட்ட காலங்களிலும் செய்யப்பட வேண்டுமேஅப்படியும் செய்யப் படவில்லையே. ஆகவேபௌர்ணமி நித்யமென்பதற்கு அர்த்தம் விளங்கவில்லை- மற்றும் ஆபஸ்தம்பரது தர்மஸூத்திரத்தைக்கவனித்தாலும் अर्धपञ्चमान् मासान् ॥ என்று ஒப்புக்கொண்டிருப்பதாலும் ப்ரோஷ்டபதி சிராவணத்தை ஆபஸ்தம்பர் ஒப்புக்கொண்டார் என்றுஆகிறது அவ்வித மேதர் மஸூத்திரவ்யாக்யாதா உஜ்வலகாரர் அர்த்தம் செய்திருக்கிறார் ஆனால் एके என்று சொன்னதனால் தனக்கு அபிப்பிராயமில்லை யென்று ஆகிறது என்போமென்றால் அப்படி இங்கு சொல்லமுடியாது. ஏனென்னில் தனதபிப்பிராயத்தைப் பூர்ணமாய் எங்காவது சொல்லியிருந்தால் அப்படி அர்த்தம் செய்யலாம் அப்படியே முக்கியமான கிருஹ்யஸூத்திரத்திற் சொல்ல வில்லை ஆகையால் ஆபஸ் தம்பருக்கும் சிராவணம் தோஷமுள்ளதானால் அதை விடவேண்டுமென்று தான் அர்த்தம் மற்றும்

मुक्त्वा भाद्रपदाषाढौ ।

என்றிருக்கிறது. தோஷயுக்தமாய் இருந்தாலும் சிராவணியிலேயேசெய்ய வேண்டுமென்றிருந்தால் பாத்திரபதத்தையும் ஆஷாடத்தையும் நிஷேதிப்பானேன்

प्राप्तस्य खलु निषेधो न्याय्यः ।

ஆகையால் இவ்வசனம் நிர்மூலமென்பது பிரமாணமென்ருல் மூன்றுமாதத்திலும் தோஷம் நேர்ந்தால் சிராவணத்தில் என்பதைக்காட்ட வந்ததென்ருவது கொள்ளவேண்டும் இவ்வசனம் எல்லா ஸூத்திரக்காரர்களுக்கும் முக்கியமான சிராவணத்தில் உபாகர்மாவைச் செய்யவேண்டுமென்றும் அது தோஷயுக்தமானல் மற்ற மாதங்களில் என்றும் மூன்றும் தோஷமுள்ளதாளுல் சிராவணத்தில் தானென்றும் தாத்பரியமென்பது நன்கு விளங்கிற்று இவ்விதமே மனுயாக்ஞவல்கியர் வஸிஷ்டர் வியாஸர் முதலிய மகரிஷிகளும் ஸ்பஷ்டமாய் ஏற்றுக்கொண்டனர் பிரமாணம் இவ்விதமிருக்க சில பெரியோர்கள என்னதோஷம் சிராவணத்திற்கேற்பட்டாலும் சிராவணத்தில் தான் செய்வது வழக்கமென்று கூறுகின்றனர். இதற்குப் பிரமாணம் எங்கேயோ அதைத்தெரிவித்தால் நலம் அல்லாவிடில் மனமுறண்டுப் பிரமாணம் தவிற வேறல்லவென்றேற்படும் சிலர்,

वेदोपाकरणे प्राप्ते कुलीरस्थे दिवाकरे ।
उपाकर्म न कर्तव्यं कर्तव्यं सिंहयुक्तके ॥

வேதத்தின் உபாகர்மத்திலிருக்கும் போது செய்யக் கூடாது ஸிம்மத்திலிருக்கும்பேதே செய்யவேண்டும் என்ற வசனத்தை நிர்மூலமாய்க் கூறுகின்றனர். இதனுலும் ப்ரோஷ்டபதம் பிரதிஷெதிக்கப் படவில்லை. ஆனுலும்

सिंहदर्शात्तु या पूर्वा पूर्णिमा श्रावणी मता ।
तत्रैवोपाकृतिं कुर्यात् सिंहस्थोऽर्कों भवेन्नवा ॥

ஸிம்மமாதத்திய அமாவாசைக்கு முன்ஞல் எந்தப் பூர்ணிமை வருகிறதோ அதுதான் சிராவணமெனப்படும். அதில் தான் உபாகர்மம் செய்யவேண்டும். அப்போது சூரியன் ஸிம்மத்திவிருந்தாலும் சரி இல்லாவிட்டாலும்சரி என்றிருக்கிற வசனத்திற்கு என்ன பதிற் கூறமுடியும். இவ்விரண்டையும் தீக்ஷிதர் எடுத்துக்கொண்டு

कुलीरे सूर्यसंयुक्ते उपाकुर्यात्तु दाक्षिणे ।
नर्मदोत्तरदेशे तु कर्तव्यं सिंहयुक्तके ॥

சூரியன் கடகததிலிருந்தும் தக்ஷிணதேசத்தார் உபாகர்மம் செய்யலாம். நர்மதையின் வடபாகத்தில் வசிப்பவர்கள் ஸிம்மத்திலிருக்கும்போது செய்வார்கள் என்று விரோதத்திற்குப் பரிகாரம் சொன்னார். ஆகவே இதன்படியே தோஷயுக்தமான ஆவணியில் தான் செய்வோமென்று சொல்லுவது தவறு. ஆகவே தோஷரகிதமான மாதத்தில் தான் செய்ய வேண்டுமென்றேற்பட்டது. இனி சில பஞ்சாங்கங்களில் ஆடிமாதத்தில் பிரதமசிராவணமென்று போட்டிருக்கிறது. அவாது பிரமாண சுலோகத்தைச் சொல்லிப்பிறகு அதன் உண்மையை உணர்வாம்.

गुरुभार्गवयोर्मौढ्ये मलमासे तथैव च ।
प्रथमोपाकृतिर्न स्यात् कुर्याच्चेत्सविनश्यति ॥

குரு சுக்கிரர்களது மௌட்டியத்திலும் மலமாஸத்திலும் பிரதமோபாகரணம் செய்யக் கூடாது. செய்தால் அவன் அழிவான் என்றுவிருத்த மனு கூறினர். இதன்படி இவ்வருடம் ஆவணியில் சுக்கிர மௌடிட்யமானதால் பிரதமோபாகர்மாவை அங்கு போடாமல் அடியிற் போட்டார்கள் போலும் இனி இங்கு சற்றறிவோம் இந்த சுலோகத்தில் மௌட்டியத்தில் பிரதமோபாகர்மம் கூடாதென்பதை நிஷேதிக்கிறதா இரண்டாவது முதலிய உபாகர்மம் தோஷயுக்தமானலும் அதைகவனிக்காமல் அதிலேயே செய்யவேண்டுமென்பதை விதிக்கவந்ததா இரண்டில் ஒன்றுதான் சொல்லலாம். இரண்டையும் ஒரேவாக்கியம் விதிப்பதென்று சாஸ்திரக்காரர்கள் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். பிரதமோபாகர்மம் கூடாதென்பதைச் சொல்லவந்ததென்றல் அதற்காக இவ்வசனம் வேண்டாம். முன் சொன்ன मलमासे என்ற சுலோகத்தாலேயே கிடைத்துவிடுகிறது.

இரண்டாவது முதலிய உபாகர்மங்களுக்கு தோஷம்கிடையாதென்பதை விதிக்கிறதென்றால் முன்சொன்ன அனேகமகரிஷிகளின் வசனம் கெடும். அவைகளைக் கெடுக்கும்படியான விசேஷ விதியென்போமென்றால் அந்த லக்ஷணமுமில்லை. லக்ஷணையால்தான் இரண்டாவது முதலிய உபாகர்மாவுக்கு தோஷமில்லையென்று அர்த்தமேற்படுகிறது. அப்படி லக்ஷணையாய் அர்த்தம் ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டுமென்ற ஆவசியகமிங்கில்லை. மற்று என்னதான் அர்த்தமென்றால் இனி அதை விசாரிப்பாம். முதலில் இங்கு ஒரு நியாயத்தை கவனிக்க வேண்டும். அதாவது ஒரு விதிவாக்கியத்தால் நிஷேத வாக்கியத்தைச் சுருக்கலாம். நிஷேதவாக்கியத்தால் விதிவாக்கியத்தைச் சுருக்கலாம். விதிவாக்கியத்தால் விதிவாக்கியத்தையே சுருக்கலாம். ஆனால் நிஷேதவாக்கியத்தால் நிஷேதவாக்கியத்தைக் குருக்கமுடியாது. இவைகளைக் கிரமமாய் உதாரணவாக்கியங்களால் தெரிந்துகொள்வோம். ஓர் ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது என்ற நிஷேத வாக்கியத்தை அக்னிஹோமத்தில் பசுவதை செய்யலாம் என்ற விதிவாக்கியம் தன் விஷயத்தில் முன் வாக்கியத்தை வரவொட்டாமற் தடுத்துக்கொண்டது. ஒருநாள் இரண்டுவேளை போஜனம் செய்யவேண்டும் என்ற விதிவாக்கியத்தை அமாவாஸ்யை தினத்தில் இரவில்போஜனம் கூடாது என்ற நிஷேதவாக்கியமானது முன் விதி வாக்கியத்தைத் 'தன் விஷயத்தில் தடுத்துக்கொண்டது. பிராமணர்களுக்குத் தயிர் கொடு என்ற விதியை கௌண்டின்யகோத்திரத்தாருக்கு மோர்கொடு என்ற விதிவாக்கியம் தன் விஷயத்தில் தடுத்துக்கொண்டது. மீண்டும் இவைகளை விரிவாய்ச் சொல்வோம். முன் சொன்ன வாக்கியங்களைச் சேர்த்துச்சேர்த்துச் அர்த்தம் கூறவேண்டும். எவ்விதமெனில் அக்னிஹோமப்பசுவைத்தவிற ஓர் ஜந்துவையும் ஹிம்ஸிக்கக்கூடாது. அப்படி ஹிம்ஸிப்பதுதான் பாபம். அமாவாஸ்யை இரவுதவிற மற்ற தினங்கள் இரண்டுவேளை போஜனம் செய்யவேண்டும். கௌண்டின்யகோத்திரப்பிராமணனைத் தவிற மற்ற பிராம்மணர்களுக்கு தயிர் கொடு என்று இவைகள்போல் ஒருநிஷேதவாக்கியத்தால்

இன்னொரு நிஷேத வாக்கியத்தைச் சுருக்கமுடியாது. உதாரணம் பிராமணனைக் கொல்லக்கூடாது என்று நிஷேதவாக்கியம் ஆத்திரேய கோத்திரத்தானைக் கொல்லக்கூடாது என்றுமற்றோர் நிஷேத வாக்கியம் இந்த இரண்டு வாக்கியங்களையும் முன்போல் சேர்த்து அர்த்தம் செய்ய ஆரம்பித்தால் ஆத்திரேய கோத்திரத்தானைக் கொல்லக்கூடாது மற்ற பிராமணனைக்கொல்லலாம் என்றாய்விடும். இதுபோலவே சுரைக்காயைச் சாப்பிடக்கூடாது, வட்டச்சுரைக்காயைச் சாப்பிடக்கூடாது என்றவிடத்திலும் நீளச்சுரைக்காயைச் சாப்பிடுவதில் தோஷமில்லை யென்றும் முருங்கக்காயைச் சாப்பிடக்கூடாது. சிவப்புக்கோடுள்ள முருங்கைக்காயை சாப்பிடக்கூடாதென்ற விடத்தில் சிவப்புக்கோடில்லாத முருங்கைக்காயை சாப்பிடலாம் ஒன்றும் அர்த்தம் செய்ய நேரிடும். ஆகையால் ஓரிடத்திலும் நிஷேதத்தால் நிஷேதத்திற்குச் சுருக்கம் கிடையாதென்பது ஸித்தாந்தம். ஆனால் இப்படி இரண்டு நிஷேத வாக்கியம் எதற்காக ஏற்பட்டது. அதற்கு கதி எவ்விதம் கற்பிக்கலாமென்றால் அதனைக் கூறுவாம். பிராமணனைக் கொல்லக்கூடாது கொன்றால் பிர்மஹத்தி ஏற்படும். ஆத்திரேயனைக் கொல்லக்கூடாது என்று மறுபடியும் சொன்னது ஆத்திரேய கோத்திரத்தானைக் கொன்றால் அதிகமான பிர்மஹத்தி பாபம் அதுபோல் சுரையைத் தின்னலாகாது. அதிலும் வட்டச் சுரையைத் தின்றால் மகாபாபம் என்று அதிக தோஷத்தை வெளியிடவந்தது. இனிப் பிரகிருதத்திலிறங்குவாம். இதுபோல் இவ்வுபாகர்ம விஷயத்தில் மலமாஸம் சுக்கிரமௌட்டியம் முதலிய தோஷங்களில் பிரதமோபாகர்மாவைச் செய்யக்கூடாது என்றால் ஒரு உபாகர்மாவும் செய்யக்கூடாது என்றும் அதிலும் பிரதமோபாகர்மம் செய்தால் மகாதோஷம் என்று தனித்தனியாய் இவ்விடங்களில் அர்த்தம் செய்யவேண்டுமே தவிர ஒன்றைச் சுருக்கி அர்த்தம் செய்யக்கூடாது. அப்படி அர்த்தம் செய்தால் ஆத்திரேயப் பிராமணனைத் தான்

கொல்லக்கூடாது. பிற்ற பிராமணனைக்கொல்லலாமென்றேற்படும். ஆகையால் இவ்வருஷம் முன் சொன்னபடி சுக்கிரமௌட்டியம் ஏற்பட்டிருந்தால் நிர்தோஷமான ஆடி மாதத்திலேயே சிராவணம் செய்யவேண்டுமே தவிற தோஷத்தோடு கூடிய ஆவணியில் செய்யக்கூடாது.

शाखाधीशे शक्तियुक्ते तच्छाखाध्ययनं शुभम् ।

வேதத்தின் அதிபதியானவன் சக்தியோடிருக்கும்போதுதான் அந்த வேதத்தை ஆரம்பிப்பது சுபம் என்றும் வேதத்தின் அதிபதி மறைந்திருக்கும்போது அத்தியயனாரம்பம் செய்வது நிஷ்பலன் என்றும் அப்படிச் செய்தால் தேசக்ஷேமத்திற்கே குறைவு ஏற்படுமென்றும்பலவாறு தாமசாஸ்திரங்கள் கதறுவதாலும் யஜுர்வேதத்தின் அதிபதி சுக்கிரனானதாலும் அச்சுக்கிரன் ஆடி-மாதம் 31ம் தேதியே அஸ்தமித்துவிடுவதாலும் அவர் இல்லாத ஆவணியில் சிராவணம் செய்ய நியாயமேகிடையாது. ஆகையால் சாஸ்திரத்தை நம்பும் ஆஸ்திகர் யாவரும் ஆடியிலேயே சிராவணத்தைச்செய்து மகரிஷிகளின் அனுக்கிரஹத்திற்குப் பாத்திராகி இகபர சுகம் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். இதுபோல் ஸாமவேதியர்களுக்கும் வேதாதிபதி மௌட்டியமடைவதால் அவர்களது உபாகர்மத்திலும் விவாதத்திற்கிடமிருப்பதாய்த் தெரிகிறது. அதைப்பற்றி சமயம் நேர்ந்தால் அடுத்த பத்திரிகையில் வரைவாம். சுபம்.

எம். என். சுப்பிரமணியசாஸ்திரிகள்.